# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:158 ★08.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:158 ★08.10.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai


## “சட்டம் படிப்பவர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டு, சமூகத்துக்கு நீதி கிடைக்க பாடுபட வேண்டும்”

### எஸ்.கே.பி சட்டக் கல்லூரி முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழாவில் மாவட்ட முதன்மை நீதிபதி M. சுமதி சாய்பிரியா அறிவுரை

திருவண்ணாமலை எஸ்.கே.பி கல்விக் குழுமத்தின்கீழ் இயங்கி வரும் எஸ்.கே.பி சட்டக் கல்லூரியில் 2026–27ஆம் கல்வியாண்டிற்கான முதலாம் ஆண்டு மாணவர்களின் வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற திருவண்ணாமலை மாவட்ட முதன்மை நீதிபதி M. சுமதி சாய்பிரியா, சட்ட மாணவர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டு, சமூகத்துக்கு நீதி கிடைக்க பாடுபட வேண்டும் என அறிவுறுத்தினார்.

விழாவுக்கு எஸ்.கே.பி கல்விக் குழுமங்களின் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார். இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்திகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எஸ்.கே.பி பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் பாஸ்கரனும் கலந்து கொண்டார்.






எஸ்.கே.பி சட்டக் கல்லூரி முதல்வர் முனைவர் N. ரவி வரவேற்புரையாற்றினார். முனைவர் M. மெய்கீர்த்தி சிறப்பு விருந்தினர்களையும், விழாவில் பங்கேற்றவர்களையும் வரவேற்று அறிமுகப்படுத்தினார். பேராசிரியைகள் G.R. ரமாகாவியா மற்றும் M. பிரீதா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். தொடர்ந்து சிறப்பு விருந்தினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு கௌரவிப்பு நடைபெற்றது.

“சட்டம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும்”

விழாவில் முதலாம் ஆண்டு சட்ட மாணவர்களிடையே மாவட்ட முதன்மை நீதிபதி M. சுமதி சாய்பிரியா பேசியதாவது:

மாணவர்கள் தங்களது பெற்றோரின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும்வகையில்சிறந்துவிளங்க வேண்டும். தங்களது பிள்ளைகளைப் பற்றி “நல்லவர், திறமையானவர்” என்று பெற்றோர் பெருமையுடன் கூறுவதைக் கேட்பது அவர்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய மகிழ்ச்சியாகும்.

சட்டக் கல்வியை மாணவர்கள் தங்களது விருப்பத்துடன் தேர்வு செய்து பயில வேண்டும். சூழ்நிலையின் காரணமாக இந்தத் துறைக்கு வந்துவிட்டோம் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. சட்டத்துறை சிறந்த தொழில்முறை துறைகளில் ஒன்றாகும். வழக்கறிஞர், நீதித்துறை அலுவலர், பேராசிரியர், சட்ட ஆலோசகர் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சட்டம் பயிலும் மாணவர்கள் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

சட்டம் என்பது நிலையானது அல்ல. சமூக மாற்றங்களுக்கு ஏற்ப சட்டமும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும். எனவே, சட்ட மாணவர்கள் தொடர்ந்து படித்து தங்களது அறிவை மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு சட்ட மாணவருக்கும், வழக்கறிஞருக்கும் புத்தகங்களும் சட்ட அறிவும் மிக முக்கியமான கருவிகள். தொழில்நுட்ப வளர்ச்சியை சரியான முறையில் பயன்படுத்தி தங்களது திறமைகளை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும். வழக்கறிஞர்கள் சமூகத்தின் “Social Engineers” ஆக செயல்பட வேண்டும் என்ற அறிஞர் Roscoe Poundன் கருத்தையும் மாணவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

பேசுவதற்கு முன் எப்போது பேச வேண்டும், எங்கு பேச வேண்டும், எவ்வளவு பேச வேண்டும் என்பதை மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். சட்டத் துறையில் அறிவுடன் ஞானம், நேர்மை, நற்பண்பு, ஒழுக்கம் ஆகியவையும் மிகவும் அவசியம்.

மாணவர்கள் தங்களது உரிமைகளை அறிந்து கொள்வதுடன், தங்களது கடமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு தங்களது எதிர்காலத்தை பாதித்துக் கொள்ளக்கூடாது.

சட்டம் படிக்கும் மாணவர்களுக்கு சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் மட்டுமின்றி, கமர்ஷியல் லா, சட்ட ஆலோசனை, நிறுவன சட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. சட்டக் கல்வியுடன் சிவில் சர்வீஸ் உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கும் மாணவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ளலாம்.

“சட்டத்தின் முன் அனைவரும் சமம்”

சட்டத்தின் முன் அனைவரும் சமம். சாமானிய மக்களுக்கும் சட்டத்தின் பாதுகாப்பும் நீதியும் கிடைக்கச் செய்வதே சட்டத் துறையில் பணியாற்றுவோரின் முக்கிய பொறுப்பு.

மாணவர்கள் சாதி, மதம், மொழி உள்ளிட்ட வேறுபாடுகளை கடந்து சகோதரத்துவம் மற்றும் சமத்துவ உணர்வுடன்செயல்படவேண்டும். குறிப்பாக, பெண் மாணவர்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் கல்வி கற்கும் சூழலை உருவாக்க சக மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், மகாத்மா காந்தி, வ.உ.சிதம்பரனார், ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட சட்டத்துறையில் சிறந்து விளங்கிய தலைவர்களை முன்மாதிரியாகக் கொண்டு மாணவர்கள் தங்களுக்கான இலக்கை நிர்ணயித்து உழைக்க வேண்டும்.

சூழ்நிலைகள் வாழ்க்கையின் வாய்ப்புகளை தீர்மானிக்கலாம். ஆனால் நாம் எடுக்கும் தேர்வுகள் நமது மனப்பாங்கைப் பொறுத்தது. எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து முன்னேற வேண்டும். எல்லா விஷயங்களும் சிறப்பாக நடைபெறும் போது உற்சாகமாக இருப்பது எளிது. ஆனால் சூழ்நிலை கடினமாகும்போது ஒழுக்கத்துடன் இருப்பதே உண்மையான வெற்றி. எனவே, மாணவர்கள் தங்களது தனிப்பட்ட மதிப்புகள், நேர்மை மற்றும் ஒழுக்கத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று அவர் அறிவுறுத்தினார்.

முதல் நாளிலிருந்தே சட்டப் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்”

விழாவில் எஸ்.கே.பி கல்விக் குழுமங்களின் மக்கள் தொடர்பு அலுவலர் (PRO) சை. சையத் ஜஹிருத்தீன் வாழ்த்துரை வழங்கினார். அவர் பேசுகையில், சட்ட மாணவர்கள் தங்களது கல்விப் பயணத்தின் முதல் நாளிலிருந்தே *Bare Acts, Sections, Judgments, Case Laws* ஆகியவற்றை வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சட்டம் என்பது ஒரு பாடம் மட்டுமல்ல; மக்களின் உரிமைகளையும் உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பாகும் என்றார். மாணவர்களுக்கு புரியும் வகையில் பல்வேறு சிறுகதைகள் மற்றும் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறிய அவர், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் சாதனைகள், பல மொழிகளைக் கற்றுக்கொள்வதன் அவசியம், தாய்மொழியானதமிழைநேசிப்பதன்முக்கியத்துவம் ஆகியவற்றையும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில் டாக்டர் P. வீரமுத்து நன்றியுரை வழங்கினார். விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், பணியாளர்கள், முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## மாதவரம் ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணைக் கட்டடத்தை முதலமைச்சர் ஜோசப் விஜய் திறந்து வைத்தார்

மாதவரம் ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணைக் கட்டடத்தைத் முதலமைச்சர் ஜோசப் விஜய் திறந்து வைத்தார்.

சென்னை மாதவரத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணைக் கட்டடத்தைத் முதலமைச்சர் ஜோசப் விஜய் திறந்து வைத்தார்.

இந்த ஆய்வகத்தில் இந்திய தர நிர்ணய ஆணையம் (*Bureau of Indian Standards*), இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) தர நிலைகளின்படி குடிநீர் சோதனைகள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் (*Tamil Nadu Pollution Control Board*) விதிமுறைகளின்படி கழிவுநீர் சோதனைகள் செய்வதற்காக, சென்னை, மாதவரத்தில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் அதிநவீன கருவிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நவீன உபகரணங்களின் உதவியுடன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தேவைகளுக்கான அனைத்துத் தரப் பரிசோதனைகளைத் துல்லியமாகவும், விரைவாகவும், சர்வதேச தரநிலைகளுக்கு இணங்கவும் மேற்கொள்ளும் வகையில் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மாதவரம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு சுமார் 4.50 இலட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு, நுகர்வோரின்பால்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மாதவரம் பால் பண்ணையில் நடைபெற்றுவரும் பால் கையாளும் மற்றும் பால் விநியோகப் பணிகளையும் முதலமைச்சர் ஜோசப் விஜய் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இறுதியாக சென்னை மாநகர மக்களின் எதிர்கால பால் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மாதவரத்தில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை 152 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இது முழுமையான வசதிகளுடன் தானியங்கி தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன பால் பண்ணையாக அமைக்கப்பட்டு வருகிறது.





இந்த கட்டிடத்தின் கட்டுமான பணிகளையும் முதலமைச்சர் ஜோசப் விஜய் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி சி. விஜயலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எம்.எல். விஜய் பிரபு, என்.செந்தில் குமார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் வி. சிவா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் அனு ஜார்ஜ், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் சு.சிவராசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆய்வு செய்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த பால்வளத் துறை அமைச்சர் விஜயலட்சுமி பேசியதாவது,

முதலமைச்சர் அவர்கள் மாதவரத்தில் உள்ள ஆய்வகத்தை திறந்து வைத்து மாதவரம் பால் உற்பத்தி மையம் மற்றும் புதிதாக கட்டி வரும் புதிய பால் பண்ணை கட்டிட பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு இருக்கிறார். அனைத்து பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டும் என கூறி உள்ளார். பால் கொள்முதல் விலையை உயர்த்தியதற்கு பிறகு 2 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆவின் நிறுவனம் தற்போது முன்னேறி வருகிறது. இதில் உள்ள குறைகளை ஒவ்வொன்றாக சரி செய்து வருகிறோம் என தெரிவித்தார்.

பால் தட்டுப்பாடு குறித்தான கேள்விக்கு, ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.6 உயர்த்தி வழங்குவதால் மீண்டும் சில பால் உற்பத்தியாளர்கள் ஆவினுக்கு திரும்பி உள்ளனர்.

இதனால் சுமார் 2 லட்சம் லிட்டர் பால் கூடுதலாக கொள்முதல் செய்யப்படுகிறது.

தனியார் நிறுவனங்கள் பால் விலை உயர்வால் அதிக மக்கள் ஆவின் பாலுக்கு மாறி வருகின்றனர். இதனால் சில இடங்களில் ஆவின் பால் தேவை அதிகரித்து உள்ளது. அதனை கூடுதலாக கொள்முதல் செய்யப்படும் பால் மூலம் சரிசெய்து வருகிறோம்.

சென்னையில் 13 லட்சம் விநியோகிக்கப்பட்ட ஆவின் பால் தற்போது 15 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், பால் மட்டுமின்றி மதிப்பு கூட்டு பொருட்கள் மீதும் ஆவின் கவனம் செலுத்தி வருகிறது.

அமுல் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டினுள் வருவதற்கு கடந்த ஆட்சியாளர்கள் அனுமதித்து விட்டனர். தற்போது அனைத்தையும் சீர் செய்து வருகிறோம் என தெரிவித்தார்.

### கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள

## அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்கப்படுமா? அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்குமா?

### எதிர்பார்ப்பு தற்போது கே.ஜி.எஃப் பகுதியில் எழுந்துள்ளது

அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறுமா? – அதிகாரிகளை சந்தித்த தெற்காசிய மனித உரிமைகளையும் தலைவர்களின் ஒருவரான டாக்டர்கள் பாபு

கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்கப்படுமா? அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு தற்போது கே.ஜி.எஃப் பகுதியில் எழுந்துள்ளது.

கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தெற்காசிய மனித உரிமைகள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் எல். பாபு அவர்கள் இன்று BGML ஸ்வர்ண பவன் OSD திரு. ஜோ ஜோசப் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதி பொது மக்கள்தொடர்ந்துவந்துசெல்லும்முக்கியமான பகுதியாக இருந்து வருகிறது. இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி கிடைக்க வேண்டும் என்பதே அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பக்தர்களின் கோரிக்கையை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில், டாக்டர் எல். பாபு அவர்கள்BGML ஸ்வர்ணபவன்OSD திரு. ஜோஜோசப் அவர்களை சந்தித்துள்ளார். அப்போது, அனுமான் சிலைக்கு உரிய அதிகாரப்பூர்வ அனுமதி வழங்குவது தொடர்பாக கோரிக்கை மனுவை முன்வைத்து, பக்தர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி கிடைக்க வேண்டும் என்பது பக்தர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக உள்ள நிலையில், தற்போது இந்த கோரிக்கை மீண்டும் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதனால், இந்த விவகாரத்தில் அதிகாரிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பக்



தர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அனுமான் பக்தர்களின் கோரிக்கையை அதிகாரிகள் உரிய முறையில் பரிசீலனை செய்து, சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தேவையான நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இந்த கோரிக்கைக்கு மேலும் காலதாமதம் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

பல ஆண்டுகளாக அனுமான் பக்தர்கள் எதிர்பார்த்து வரும் இந்த கோரிக்கைக்கு தற்போது ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக உள்ளது.

அதிகாரப்பூர்வ அனுமதி கிடைத்தால், பக்தர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நம்பிக்கையிலும் அவர்கள் உள்ளனர்.

இதனிடையே, டாக்டர் எல். பாபு அவர்கள் அதிகாரிகளை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளதால், இந்த விவகாரம் மீண்டும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதிகாரிகளின் பதில் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கையை பக்தர்கள் மட்டுமின்றி கே.ஜி.எஃப் பகுதி பொதுமக்களும் எதிர்பார்த்து வருகின்றனர்.

அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய ஆய்வு மேற்கொண்டு, நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி முடிவு எடுப்பார்களா என்பதும் கவனிக்க வேண்டிய விஷயமாக உள்ளது.

ஒருபுறம் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை, மறுபுறம் அதிகாரப்பூர்வ அனுமதி தொடர்பான நடைமுறைகள் என இந்த விவகாரம் தற்போது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு அதிகாரிகள் எப்போது பதில் அளிப்பார்கள்? பக்தர்களின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வு கிடைக்குமா? அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? என்பதே தற்போது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

டாக்டர் எல். பாபு அவர்கள் முன்வைத்துள்ள இந்த கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அனுமான் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே பக்தர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. கே.ஜி.எஃப் ஐந்து விளக்கு பகுதியில் உள்ள அனுமான் சிலைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி கிடைக்குமா? பக்தர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? இந்த கேள்விகளுக்கான பதிலை அதிகாரிகளின் அடுத்தகட்ட நடவடிக்கையே தீர்மானிக்க உள்ளது.

### தேசிய அளவில் சிறந்த நிலக்கடலை விதை உற்பத்தியாளர் விருது:

# திருவண்ணாமலை கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்துக்கு தேசிய அங்கீகாரம்

திருவண்ணாமலை மாவட்டம் சு.வாளவெட்டி கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், 202526ம் ஆண்டில் தரமான நிலக்கடலை விதை உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு வழங்கியதில் சிறப்பாக செயல்பட்டதற்காக தேசிய அளவில்பாராட்டுச்சான்றிதழ் பெற்றுள்ளது.

குஜராத் மாநிலம் ஜூனாகத்தில் செயல்பட்டு வரும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் இந்திய நிலக்கடலை ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், அதிக அளவில் தரமானநிலக்கடலைவிதைகளை உற்பத்தி செய்து, அதன் மூலம் அதிக நிலக்கடலை உற்பத்திக்கு வழி வகுத்த சிறந்த கூட்டாண்மை நிறுவனமாக கிரிவலம் உழவர் உற்பத்தியாளர்நிறுவனம்தேர்வு செய்யப்பட்டது.

இந்திய நிலக்கடலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 48வது நிறுவன நாள் விழா அக்டோபர் 1ம் தேதி நடைபெற்றபோது, தேசிய அளவிலான சிறந்த உற்பத்தியாளருக்கான பாராட்டுச் சான்றிதழ் கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இதையடுத்து, கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநர்கள், உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள், அந்தப் பாராட்டுச் சான்றிதழை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்கிடம் இன்று (அக்.7) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காண்பித்து வாழ்த்துகளைப் பெற்றனர்.

நபார்டு வங்கியின் ஆதரவுடன் மத்திய அரசின் 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கி மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், 2021ம் ஆண்டு தொடங்கப்பட்ட கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தற்போது 750 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம் இந்திய நிலக்கடலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து தரமான நிலக்கடலை விதை உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

202526ம் ஆண்டில் வி.ஆர்.ஐ.10 மற்றும் டி.ஏ.ஜி.73 ஆகிய மேம்படுத்தப்பட்ட நிலக்கடலை ரகங்களின் 45 டன் விதைகளை உற்பத்தி செய்து, 25 கிராமங்களைச் சேர்ந்த 1,800 விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளது. விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், மேம்படுத்தப்பட்ட ரகங்களின் மூலம் நிலக்கடலை மகசூலை அதிகரிக்கும் பணியிலும் நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ரூ.1 கோடிக்கும் அதிகமான விற்றுமுதலை ஈட்டி வருவது குறிப்பிடத்த க்கது.

தேசிய அளவில் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம், திருவ ண்ணாமலை மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண் வளர்ச்சிப் பணிகளுக்கு கிடைத்துள்ள முக்கிய மான அங்கீகாரமாக அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கோகிலா சக்தி, கிரிவலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்கள் இராமலிங்கம், ஜெகதீசன், தலைமைச் செயல் அலுவலர் சபரி, நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் எம். விஜய் நீஹார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வாலாஜா வட்டம், அம்மூர் பேரூராட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளி வகுப்பறையில் 12ஆம் வகுப்பு கணிதப் பாடம் நடத்தப்படுவதை பார்வையிட்டு, ஆசிரியரின் கற்பித்தல் முறையைக் கவனித்து, மாணவர்களைக் கணக்குகளைப் போடச் செய்து அவர்களின் புரிதல் திறனை ஆய்வு செய்தார்கள். உடன் முதன்மை கல்வி அலுவலர் மோகனா மற்றும் பலர் உள்ளனர்.

# கீரனூரில் போலீசார் தீவிர வாகன சோதனை - ஹெல்மெட் அணிவது குறித்து விழிப்புணர்வு



திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே கீரனூர்காவல்நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படி பழனி துணை காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் உத்தரவின்படி போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். கீரனூர் காவல் ஆய்வாளர் வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற சோதனையில், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களைபோலீசார்ஆய்வு செய்தனர்.

இருசக்கரவாகனஓட்டிகள்கட்டாயம்ஹெல்மெட் அணிய வேண்டும் என்றும், சாலை விதிகளை கடைப்பிடித்து பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என்றும் போலீசார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சாலை பாதுகாப்பை உறுதி செய்ய போலீசாரின் வாகன சோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



பழனி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரில் லட்சுமிபுரம் சாலையில் பல மாதங்களாக இந்த சாலை சரி செய்யப்படாமல் ஒரு வீடு கட்டும் அளவிற்கு ஜல்லி கற்கள் தேங்கியுள்ளது சேதம் அடைந்த சாலையை உடனடியாக சரி செய்ய வேண்டுமென வாகன ஓட்டிகள் கோரிக்கை.

### இராணிப்பேட்டையில்

# அடையாளம் தெரியாத வாகனம் மோதி தொழிலாளி பலி



இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா கச்சால நாயக்கர் தெருவைச் சேர்ந்தவர் முருகன் (40). ஸ்டீல் கிரில் ஒர்க் தொழில் செய்து வந்த இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், முருகன் தனது வீட்டிலிருந்து வேலைக்காக அணைக்கேட் ரோடு வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது, அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத வாகனம் ஒன்று அவர் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் முருகனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த வாலாஜா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, முருகனின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக வாலாஜா அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து வாலாஜா போலீசார் வழக்குப்பதிவு செய்து, விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனம் குறித்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பழனியில் 10 ரூபாய் கள்ள நோட்டு பழக்கமா? வியாபாரிகள் அவதி

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரில் 10 ரூபாய் மதிப்பிலான கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதாக புகார் எழுந்துள்ளது கடைகளில் பொருட்கள் வாங்கி விட்டு கள்ள நோட்டுகளை கொடுத்து செல்லாததால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவதாக கூறப்படுகின்றன இது குறித்து காவல்துறையின உரிய விசாரணை நடத்தி கள்ள நோட்டு புழக்கத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவியாபாரிகள்கோரிக்கைவிடுத்துள்ளனர்

# பழனியில் ரூபாய் 100 கோடி நில மோசடி பத்திரப்பதிவு வழக்கு மேலும் 2 பேர் கைது

பழனியில் அறநிலைத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த ரூபாய் 100 கோடி மதிப்பிலான நில மோசடி பத்திரப்பதிவு வழக்கில் சிபிசிஐடி போலீஸ் ஆர் மேலும் பெண் உள்பட 2 பேரை கைது செய்தனர் இந்த வழக்கில் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உள்ளிட்ட 11 பேரைமீது வழக்கு பதிவு செய்யப்பட்டு ஏற்கனவே ஆறு பேர்கைது செய்யப்பட்டுள்ளனர் இந்த நிலையில் பழனி சார் பதிவாளர் அலுவலகம் இளநிலை உதவியாளர் சிவசங்கரி மற்றும் இடத் தலைவர் ஜெயபிரகாசுக்கு உடந்தையாக செயல்பட்டதாககூறப்படும் வழக்கறிஞர்சிவக்குமார் ஆகியோரை சிபிசிஐடி போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க போளூர் தொன் போஸ்கோ உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

# இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் 07.10.2026 தேதி வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே. சிபின், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கு றைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 45 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.

# சாணார்பட்டி அருகே வாலிபரை வெட்டி படுகொலை செய்த வழக்கில் சிறுவன் உட்பட 11 பேர் கைது

## எஸ்.பி.அதிரடி நடவடிக்கை

திண்டுக்கல், நத்தம் ரோடு, நொச்சியோடைபட்டி அருகே சாணார்பட்டி காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பி வந்த பாத்ரூம் முருகன் கொலை வழக்கில் முதல் குற்றவாளி மேட்டுப்பட்டியை சேர்ந்த வீரபத்திரன் என்பவரை மர்ம கும்பல் வெட்டி படுகொலை செய்தது.



இதுகுறித்து மாவட்ட எஸ்.பி.ஜெயக்குமார் உத்தரவின் பேரில் புறநகர் ASP.மஞ்சிமா, நகர்DSP. கார்த்திக் ஆகியோர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட நல்லாம்பட்டியைசேர்ந்தமூர்த்தி(47), குமரேசன்(36), கூவனூத்தை சேர்ந்த பாலு(49), கிழக்கு மரியானாதபுரத்தை சேர்ந்த நவீன்குமார்(20), முத்தழகுபட்டியை சேர்ந்த லிட்டில்பிரின்ஸ் ராஜ்(26), தேவரூபன் ரெனால்டோ (2 4),ஆரோக்கிய ஜெட்லி(27), பாலமரத்துப்பட்டியை சேர்ந்த ராம்குமார்(33) மற்றும் ராஜசேகர்(31) ராஜக்காபட்டியை சேர்ந்த கதிர்வேல்(36) மற்றும் 17 வயது சிறுவன் ஆகிய 11 பேரை கைது செய்தனர்.



**பழனி நூறு கோடி மதிப்பிலான கோயில் நில மோசடி வழக்கில் கைதான இடைத்தரகர் ஜெயபிரகாசுக்கு உதவியாக இருந்த வழக்கறிஞர் சிவகுமார் கைது**

### திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே

# வத்தலகுண்டு பேருந்து நிலையம் பகுதியில் செயல்பட்டு வரும் மதுக்கடையை அகற்றக் கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே வத்தலகுண்டு பேருந்து நிலையம் பகுதியில் செயல்பட்டு வரும் மதுக்கடையை அகற்றக் கோரி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மதுக்கடை அமைந்துள்ள இடத்தைச் சுற்றிலும் மருத்துவமனை, கோவில், பள்ளிக்கூடம், பேருந்து நிலையம், வணிக நிறுவனங்கள், வங்கிகள், உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய இடங்கள் இருப்பதாகவும் அதுமட்டுமின்றி, காவல் நிலையமும் அருகிலேயே இருப்பதாகவும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் பகுதியில் மதுக்கடை செயல்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த மதுக்கடையை அகற்றுவது தொடர்பாக ஏற்கெனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்ததாகவும், ஆனால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இந்த மதுக்கடையை அகற்ற வேண்டும் என அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள்திண்டுக்கல்மாவட்ட காவல் கண்காணிப்பாளர்அலுவலகத்தில்புகார் அளித்துள்ளனர்.

# எடையாளர்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் புதிய நியமன பரிந்துரையா? 24 உரிமம் பெற்ற தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என எதிர்ப்பு

## போளூர் எம்.எல்.ஏ.வின் பரிந்துரையை கைவிட ஆட்சியரிடம் மனு

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பல ஆண்டுகளாக உரிமம் பெற்று எடைப்பணி செய்து வரும் 24 தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில், புதிதாக 15 பேரை எடைப்பணியில் சேர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த பரிந்துரையை உடனடியாக கைவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக்கூட எடைப்பணி தொழிலாளர் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.



சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து விவசாயிகள் நெல் உள்ளிட்ட பல்வேறு வேளாண் விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இவ்வாறு கொண்டு வரப்படும் விளைபொருட்களை எடை போடும் பணியை முறையாக உரிமம் பெற்ற எடையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தற்போது 24 பேர் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பணியை மட்டுமே நம்பி தங்களது குடும்பங்களை நடத்தி வரும் நிலையில், கூடுதலாக புதிய நபர்களை எடைப்பணியில் ஈடுபடுத்தினால் ஏற்கனவே பணியில் உள்ள உரிமம் பெற்ற தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்பு குறைந்து, அவர்களது வருமானமும் பாதிக்கப்படும் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், போளூர் சட்டமன்ற உறுப்பினர் அபிஷேக், வேளாண் விற்பனைக்குழு செயலாளருக்கு பரிந்துரை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. அந்த கடிதத்தில் உள்ளூரைச் சேர்ந்த 15 பேரின் பெயர்களை குறிப்பிட்டு, அவர்களை எடைப்பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.வி.சரவணன் தலைமையில் நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவில், ஏற்கனவே உரிமம் பெற்று பல ஆண்டுகளாக எடைப்பணி செய்து வரும் தொழிலாளர்களின் நிலையை கருத்தில் கொள்ளாமல் புதிய நபர்களை சேர்ப்பது, அவர்களின் வாழ்வாதாரத்தில் நேரடி பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளனர். மேலும், எடைப்பணி என்பது குறிப்பிட்ட விதிமுறைகளின் கீழ் உரிமம் பெற்று மேற்கொள்ளப்படும் பணியாக இருப்பதால், ஏற்கனவே பணியில் உள்ள உரிமம் பெற்ற தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகளின் விளைபொருட்கள் வரத்து அதிகரிக்கும் காலங்களில் ஏற்கனவே உள்ள எடையாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமை ஏற்படுவதாகவும், அந்த நேரங்களில் அவர்களின் பணியை ஒழுங்குபடுத்தி, உரிய முறையில் வேலை வாய்ப்பை உறுதி செய்வதே தேவையான நடவடிக்கையாக இருக்கும் என்றும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, புதிய 15 பேரை எடைப்பணியில் சேர்க்கும் பரிந்துரையை கைவிடுவதுடன், ஏற்கனவே உரிமம் பெற்று பணியாற்றி வரும் 24 எடையாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, அனைத்து தரப்பினரின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு நியாயமான தீர்வு காண வேண்டும் என்றும் சங்கத்தினர் வலியுறுத்தினர். மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தபோது சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.வி. சரவணன், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.மாரிமுத்து, ஆர்.சேகர், கேசவன், எம். பாக்கியநாதன், பி.வெங்கடேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.






# நாடு முழுவதிலும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில், சமரசம் மூலம் சுமுகமாகத் தீர்வு காண,சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் சம்மதத்துடன் சமரசம் மூலம் தீர்வு காணலாம்.

நாடு முழுவதிலும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில், சமரசம் மூலம் சுமுகமாகத்தீர்வுகாண, சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் சம்மதத்துடன் சமரசம் மூலம்தீர்வுகாணலாம்.

இதற்காக கடந்த அக்டோபர் 1ம்தேதி முதல் வருகிற டிசம்பர் 31ம்தேதி வரை நாடு முழுவதிலும் ' தேசிய சமரச தீர்வு 3.0 என்ற பெயரில் சிறப்பு சமரச இயக்கம் நடைபெறுகிறது.

இந்த சமரச தீர்வின் மூலம் இரு தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்து சுமுகமான முறையில் தீர்வு காண வாய்ப்பு உள்ளது. மேலும்வழக்குகளை விரைவாக முடிக்கவும், நேரம் மற்றும் செலவினை குறைக்கவும், தரப்பினர்களிடையே நல்லுறவைப் பேணவும் உதவும்.

எனவே சமரச மூலம் தீர்வு காணத் தகுதியான வழக்குகள் குறித்து சம்பந்தப்பட்ட நீதிமன்றம் , மாவட்ட , வட்ட சமரச துணை மையங்களை அணுகி விவரங்களைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்று ராணிப்பேட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தேசிய சமரச தீர்வு 3.0 குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ராணிப்பேட்டை மாவட்ட முதன்மை நீதிபதி தேன்மொழி தலைமை தாங்கி சமரச தீர்வு குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு வந்தனர்.

பின்னர் ராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தை மாவட்ட முதன்மை நீதிபதி தேன்மொழி கொடியசைத்து தொடங்கி வைத்து,

பள்ளி மாணவர்களுக்கு எழுது பொருள்கள் வழங்கினார்.

மாவட்ட முதன்மை கூடுதல் அமர்வு நீதிபதி பாலகிருஷ்ணன், மாவட்ட சட்டப்பணிகள் குழு செயலாளரும் சார்பு நீதிபதியுமான முனுசாமி, சார்பு நீதிபதி பாரதி, உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் பூர்ணிமா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ராணிப்பேட்டை முத்துக்கடை பஸ்நிலையத்தில் நிறைவடைந்தது.

பின்னர் முத்துக்கடைபஸ் நிலையத்தில் நீதிபதிகள் சமரச தீர்வு குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கினர். .இதில் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜெயக்குமார், துணைத் தலைவர் வேதநாயகம், செயலாளர் கோபிநாத், தற்போதைய அரசு வழக்கறிஞர் VPடில்லி முன்னாள் அரசு வக்கீல் சுரேஷ் உள்பட வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மேனலூர் அரசு பள்ளியில் ரூ.3 லட்சத்தில் புதிய அறிவுசார் மையம்: முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ் திறந்து வைத்தார்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே மேனலூரில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர் மற்றும் பள்ளி வளர்ச்சி நிதி மூலம் ரூ.3 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம் திறப்பு விழா நடைபெற்றது.

வெம்பாக்கம் தாலுகா மேனலூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் இந்த பள்ளியில் மாணவர்களின்



கல்வி மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில், முன்னாள் மாணவர் சங்கர் மற்றும் பள்ளி வளர்ச்சி நிதி மூலம் நிதி திரட்டப்பட்டு புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செய்யாறு மாவட்ட கல்வி அலுவலர் செந்தில்முருகன் தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் கே.சாந்தி, துணைத்தலைவர் எஸ்.ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருவண்ணாமலை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.முனிராஜ், புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், கல்வியில் தொடர்ந்து ஆர்வத்துடன் செயல்பட்டு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

மேலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நிதியுதவி வழங்கிய முன்னாள் மாணவர் மற்றும் பள்ளி வளர்ச்சிக் குழுவினருக்கு நன்றி தெரிவித்ததுடன், அவர்களின் பங்களிப்பை பாராட்டி வாழ்த்தினார்.

நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கண்ணதாசன், பழனி, செழியன், சேகர், அருள்ஜோதி, சாந்தி, துரைமுருகன், கலையரசன், கண்ணப்பன், கோபி கண்ணன், சற்குணம், ராமலிங்கம், சந்திரசேகரன், காண்டீபன், முருகவேல், ரமேஷ், சிவக்குமார், கந்தன், கல்பனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் சித்தாத்தூர் பள்ளி தலைமை ஆசிரியர் அன்பழகன், செய்யாறு பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயகாந்தன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் உமாமகேஸ்வரி, ஆசிரியர் ராஜசேகர், ஊர் பிரமுகர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் மூன்று பயனாளிகளுக்கு தங்க மோதிரம் வழங்கிய மாதவரம் தவெக சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு வழங்கினார்






தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் மூன்று பயனாளிகளுக்கு தங்க மோதிரம் வழங்கிய மாதவரம் தவெக சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு வழங்கினார்

மாதவரம் தொகுதி புழல் நகர்ப்புற அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தமிழக அரசின் தாய்மாமன்தங்கமோதிரம்திட்டத்தின் கீழ் தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு தாய்மார்களிடம் நலம் விசாரித்து மூன்று குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை வழங்கினார்.

மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட தாய்மார்கள் தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மருத்துவர்கள், செவிலியர்கள், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கழகம் இணைந்து பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த பயிற்சி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கழகம் இணைந்து பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த பயிற்சிகளை வழங்க உள்ளதாக ராணிப்பேட்டைமாவட்ட




ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. சென்னை மாவட்டத்தில் மென்பொருள் வடிவமைப்பாளர், வலைதள வடிவமைப்பாளர் மற்றும் பயன்பாட்டு மென்பொருள் மேம்பாட்டாளர் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மென்பொருள் மற்றும் வலைதள வடிவமைப்பாளர், பயன்பாட்டு மென்பொருள் மேம்பாட்டாளர், தரவுப் பகுப்பாய்வாளர், நுண்நிதி நிர்வாகம் மற்றும் காப்பீட்டு முகவர் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. மதுரை மாவட்டத்தில் தரவுப் பகுப்பாய்வாளர், மென்பொருள் வடிவமைப்பாளர், நுண்நிதி நிர்வாகம் மற்றும் காப்பீட்டு முகவர் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. மென்பொருள் சார்ந்த பயிற்சிகளில் சேர விரும்புவோர் இளங்கலை பொறியியல் அல்லது பி.எஸ்சி. கணினி அறிவியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும். நிதி சார்ந்த பயிற்சிகளுக்கு இளங்கலை வணிகவியல் (பி.காம்.) அல்லது இளங்கலை வணிக நிர்வாகவியல் (பி.பி.ஏ.) பட்டம் பெற்றிருக்க வேண்டும். இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராகவும், 18 முதல் 35 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். மேலும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். பயிற்சியை முழுமையாக நிறைவு செய்யும் இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேலும், பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் தகுதியான நபர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்படும். பயிற்சியில் சேர விரும்பும் தகுதியான இளைஞர்கள் தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அக்.10ல் சிறப்பு முகாம்: 1,396 வாக்குச்சாவடிகளில் ஏற்பாடு - ஆட்சியர் வந்தனா கார்க் தகவல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களின் பெயர்களை சேர்ப்பதற்காக வருகிற 10ந்தேதி (அக்.10) சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 1,396 வாக்குச்சாவடி மையங்களிலும் இந்த சிறப்பு முகாம் நடைபெறுகிறது. 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் மற்றும் இதுவரை வாக்காளர்பட்டியலில்பெயர் இடம்பெறாத தகுதியானவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் பெயரை வாக்காளர்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

இதற்காக படிவம் 6ஐ பூர்த்தி செய்து, அதனுடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், வயதுக்கான ஆதாரம் மற்றும் இருப்பிடத்திற்கான



ஆதார ஆவணங்களை இணைத்து, தங்கள் பகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் நடைபெறும் சிறப்பு முகாமில் வழங்க வேண்டும்.

வருகிற 10ந்தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பு முகாம் நடைபெறும். எனவே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தகுதியுள்ள 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இந்து மக்கள் கட்சி சார்பில் சரஸ்வதிபூஜை,ஆயுத பூஜை, விஜயதசமி விழாக்களை பாரம்பரிய முறைப்படி கொண்டாட வலியுறுத்தி வீடு வீடாக விழிப்புணர்வு நோட்டீஸ்

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை நகரில் வரவுள்ள சரஸ்வதிபூஜை, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி விழாக்களை இந்து மக்கள் பாரம்பரிய முறைப்படி கொண்டாட வேண்டும் என்பதை வலியுறுத்தி, இந்து மக்கள் கட்சி சார்பில் வீடு வீடாக நோட்டீஸ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்து மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத் அறிவுறுத்தலின்படியும், சமூக ஊடகப் பிரிவு மாநிலத் தலைவர் ஜே. கண்ணன் வழிகாட்டுதலின்படியும், வேலூர் கோட்டத் தலைவர் எஸ். கே. மோகன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.





வாலாஜாபேட்டை பகுதியில் காலை 10 மணியளவில் தொடங்கிய நிகழ்ச்சியில், வாலாஜா ஒன்றியம், நகரம், பேரூராட்சி, ஊராட்சி மற்றும் கிராமப்புறங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து, விழா வாழ்த்துகளுடன் நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன.

மேலும், சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி விழாக்களை பாரம்பரிய முறைப்படி கொண்டாடுவது தொடர்பானதகவல்களும் பொதுமக்களிடம் தெரிவிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் இந்து மக்கள் கட்சியின் ஆன்மீகப் பிரிவு மாவட்டத்தலைவர் ஸ்ரீதர், மாவட்டப் பொருளாளர் சம்பத், மாவட்டச் செயலாளர் பார்த்திபன், வாலாஜா ஒன்றியச் செயலாளர் மணிவண்ணன், வாலாஜா ஒன்றியப் பொறுப்பாளர் பரத், வாலாஜா நகரப் பொறுப்பாளர் ரவி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வாலாஜா பகுதி முழுவதும் கிராமங்கள் வாரியாக வீடு வீடாகச் சென்று பொதுமக்களுக்கு விழா வாழ்த்துகள் தெரிவித்து நோட்டீஸ் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

10 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் வர இருந்த நிலையில் விபரீதம்:

# செய்யாறு அருகே கோழிப்பண்ணையில் மின் கசிவால் பயங்கர தீ

## 200க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் கருகின; ரூ.10 லட்சம் பொருட்கள் சேதம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த உக்கல் பெண்டை கிராமத்தில் மின் கசிவு காரணமாக கோழிப்பண்ணையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 200க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் தீயில் கருகின. மேலும், சுமார் ரூ.10 லட்சம் மதிப்பிலான கோழிக் கொட்டகை மற்றும் கோழித் தீவனங்கள் உள்ளிட்ட பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன.



உக்கல் பெண்டை கிராமத்தைச் சேர்ந்த ஹேமலதாவுக்கு சொந்தமான சுமார் 5,000 சதுர அடி பரப்பளவிலானகோழிப் பண்ணையில் இந்த தீ விபத்து ஏற்பட்டது. இங்கு ஏற்கனவே 200க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் வளர்க்கப்பட்டு வந்தன.

மேலும், நாளை புதிதாக 10 ஆயிரம் கோழிக் குஞ்சுகளை பண்ணையில் இறக்கி வளர்க்க திட்டமிடப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து கோழிக்கொட்டகையை சீரமைக்கும் பணியில் பண்ணை உரிமையாளர் மற்றும் தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், இன்று பிற்பகல் திடீரென மின் அழுத்தம் காரணமாக அங்கிருந்த மின் சாதனப் பெட்டியில் மின் கசிவு ஏற்பட்டு தீப் பிடித்ததாக கூறப்படுகிறது.

அடுத்த சில நிமிடங்களில் தீ மளமளவென பரவி, கோழிக் கொட்டகை முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்தது.

தீ விபத்தில் கொட்டகையில் வளர்க்கப்பட்டு வந்த 200க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் தீயில் கருகின.

மேலும், 10 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை வளர்ப்பதற்காக ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த கோழித் தீவனங்கள், கொட்டகையின் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்டவை தீயில் எரிந்து நாசமாகின. மொத்தமாக சுமார் ரூ.10 லட்சம் மதிப்பிலான கோழிக் கொட்டகை மற்றும் பொருட்கள் தீயில் சேதமடைந்ததாக பண்ணை உரிமையாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் செய்யாறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு தீ முற்றிலும் அணைக்கப்பட்டு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நாளையே 10 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் பண்ணைக்கு வர இருந்த நிலையில்,

அதற்கு முந்தைய நாளில் ஏற்பட்ட இந்த தீ விபத்து உக்கல் பெண்டை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும்
தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில்
சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779





திருவள்ளூர்மாவட்டஆட்சியர்வளாகத்தில்ஒருங்கிணைந்தகுழந்தைவளர்ச்சி திட்டம் (ம) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 150க்கும் மேற்பட்டபணியாளர்கள்கலந்துக்கொண்டதேசியஊட்டச்சத்துமாதவிழிப்புணர்வு பேரணியைமாவட்டஆட்சித்தலைவர்ச.கவிதாகொடியசைத்துதுவக்கிவைத்தார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் கவிதா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட (பொ) வனிதா, அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருவண்ணாமலை வருவாய் மாவட்ட தடகள போட்டிகள் தொடக்கம்: ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை வருவாய் மாவட்ட தடகளபோட்டிகள்தொடக்கம்: ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற திருவண்ணாமலை வருவாய் மாவட்ட அளவிலான மாணவிகளுக்கான தடகளப் போட்டிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (07.10.2026)தொடங்கி வைத்தார்.



இதையொட்டி நடைபெற்ற தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி மாணவிகளுக்கான தடகளப் போட்டிகளை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களைவழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் 11 குறுமையங்களில் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகள் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றனர். அதன்படி, மாவட்ட அளவிலான மாணவிகளுக்கான தடகளப் போட்டிகளில் 92 பள்ளிகளைச் சேர்ந்த 736 மாணவிகள் பங்கேற்றனர். இவர்களுக்கு 44 வகையான தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தினர்.

மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள் நாளை நடைபெற உள்ளன. மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் மாணவ, மாணவிகள், இந்த மாதம் சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ள மாநில அளவிலான தடகளப் போட்டிகளில் திருவண்ணாமலை மாவட்டத்தின் சார்பில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மாவட்ட விளையாட்டு அலுவலர் சண்முகப்பிரியா மற்றும் பள்ளிக் கல்வித்துறை, விளையாட்டுத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாலாஜாப்பேட்டையில் பாலாறு பாதுகாப்பு மற்றும் நீர் மேலான்மை குழுவினர் ஆலோசனை கூட்டம்

வாலாஜா அனைக்கட் ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பாலாற்றை பாதுகாத்து அதன் நீர்வளத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து, பாலாறு பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை குழுவின் ஆலோசனை கூட்டம் 07.10.26 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பாலாற்றில் நீர்வரத்துக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வளர்ந்துள்ள சீமைக்கருவேல மரங்களை வேருடன் அகற்றி, ஆற்றுப்பகுதியை தூய்மைப்படுத்துவதுகுறித்து முக்கி நிகழ்வாக விவாதிக்கப்பட்டது. மேலும், பாலாற்றின் கரைகளை பாது காக்கும் வகையில், பயன்தரும் பசுமைப் மரக்கன்றுகள் மற்றும் பனை விதைகளை நடவு செய்வது.

ஆற்றங்கரையில் பரப்பை அதிகரிப்பது, பாலாற்றின் நீர்வளத்தை எதிர்கால தலைமுறைக்கும் பாதுகாக்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் பங்களிப்புடன் தொடர்ந்து பல்வேறு பணிகளை மேற்கொள்வது குறித்து இக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்தில் வணிகர் சங்கங்களின்பேரமைப்பு தலைவர் பொன்.கு சரவணன் முன்னிலையில் இயற்கைவிவசாயிகளின் கூட்டமைப்பு தலைவர் கே.எம். பாலு அவர்களிடம் வணிகர் சங்கம் சார்பில் ரூபாய் 1,00,000 நிதி வழங்கப்பட்டனர் மேலும் இக் கூட்டத்தில் வணிகர்கள் சங்கம், தமிழ்நாடு ஹோட்டல் சங்கம், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், ரெட் கிராஸ் சொசைட்டி, வியாபாரிசங்கம்போன்ற பல்வேறு சங்கங்களில் இருந்து தலைவர்கள், மற்றும் உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது ஒத்துழைப்பைதருவதாக தெரிவித்தனர்.

# பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால சேவையை போற்றும் வகையில் செங்கத்தில் சேவாஜோதி சங்கல்ப யாத்திரை

பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால மக்கள் நலப்பணிகள் மற்றும் சேவைகளை போற்றும் வகையில், திருவண்ணாமலை மாவட்ட பாஜக சார்பில் 'சேவாஜோதி சங்கல்ப யாத்திரை' விழிப்புணர்வு ஜோதி ஊர்வலம் செங்கத்தில் நடைபெற்றது.

திருவண்ணாமலை ஒருங்கிணைந்த மாவட்ட பாஜக சார்பில் நடைபெற்ற இந்த யாத்திரையில், பாஜக தமிழ்நாடு மாநில ஊடகப் பிரிவு தலைவர் ரங்கநாயகலு, உள்ளாட்சி மேம்பாட்டுப் பிரிவு மாநில அமைப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். அவர்கள் சேவாஜோதி சங்கல்ப உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து சேவாஜோதியை ஏற்றி வைத்து, செங்கம் ராஜவீதியில் இருந்து போளூர் சாலை வழியாக பழைய பேருந்து நிலையம் வரை ஜோதி ஊர்வலம் நடைபெற்றது. இதில் பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

ஊர்வலத்துக்குப் பின்னர் பாஜக மாநில ஊடகப் பிரிவு தலைவர் ரங்கநாயகலு, தூர்தர்ஷன் மற்றும் வானொலி செய்திப் பிரிவுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால மக்கள் சேவையைப் போற்றும் வகையில் நாடு முழுவதும் 'சேவாஜோதி சங்கல்ப யாத்திரை' ஜோதி ஊர்வலம் ஒரு இயக்கமாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் தொலைநோக்குத் திட்டத்தை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதே இந்த யாத்திரையின் நோக்கமாகும்.





பிரதமரின் உரையை நேரடியாக ஒளிபரப்புவதற்கு தமிழகத்தில் காவல் துறை அனுமதி அளிக்க மறுப்பதை பாஜக கண்டிக்கிறது. தமிழகத்தில் பாஜகவுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் மட்டுமே இருந்தாலும், பிற மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதியைப் போலவே தமிழ்நாட்டிற்கும் மத்திய அரசு நிதி வழங்கி வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பாஜக மாவட்டத் தலைவர்கள் ரமேஷ், கவிதா வெங்கடேசன், மாவட்ட பொதுச்செயலாளர் ரமேஷ், மாநில மற்றும் மாவட்ட மூத்த நிர்வாகிகள் டி.எஸ். சங்கர், குணசேகரன், ஜெம்புகுமார் ஜெயின், அறவாழி, மாவட்ட பொதுச்செயலாளர்கள் ஜெய்நாத், கவிதா, பிரதீஷ், முத்துசாமி, மாவட்ட துணைத் தலைவர்கள் சேகர், கிருஷ்ணமூர்த்தி, சிவசங்கரன், தீபாஷங்கர், மாவட்ட செயலாளர்சஞ்சீவிபழனி, தேசிய மொழிகள் பிரிவு செயலாளர் ராஜ்குமார், நிகழ்ச்சி பொறுப்பாளர் மாந்தோப்பு ராஜா உள்ளிட்ட பல்வேறு அணிகள் மற்றும் பிரிவுகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும், அணித் தலைவர்கள் நவீன்குமார், கீர்த்திசெல்வம், மூர்த்தி, பிரகாஷ், வர்த்தகப் பிரிவு நிர்வாகிகள் முரளி, ஆதவன், பிரிவு தலைவர்கள் சீனிவாசன், வெங்கடேசன், அரங்கநாதன், பழனிவேல், பூபதி, ராஜா, ஹரி கோவிந்தன், கிஷோர், மோகன், ஜெயச்சந்திரன், முத்துக்குமார், முருகன், பச்சையப்பன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் ராஜலட்சுமி, ராஜதமியேந்தி, ஏழுமலை, இளங்கோ மற்றும் மண்டல் தலைவர்கள் இளங்கோ, லதா, ஜீவா, சத்யராஜ், பவுன்குமார், வெங்கடேசன், தங்கராஜ், சக்திவேல் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இறப்புக்கு முன் ரத்த தானம்

இறப்புக்கு பின் கண் தானம்

செய்யாறில் டெங்கு உற்பத்தியாகும் வகையில்

# திறந்த வெளியில் இருந்த 30 டயர்கள் நகராட்சி அதிகாரிகள் பறிமுதல்



செய்யாறில் டெங்கு உற்பத்தியாகும் வகையில் திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த இருந்த 30 டயர்கள் நகராட்சிஅதிகாரிகள்நேற்று மாலை பறிமுதல் செய்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சியின் சார்பாக நகராட்சி ஆணையாளர் செ.ஆண்ரூஸ் தலைமையில் துப்புரவு ஆய்வாளர் கே.மதனராசன் மேற்பார்வையில் டெங்கு கொசு ஒழிப்பு தடுப்பு பணிகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி செய்யாறு புறவழிச் சாலையில் உள்ள டயர் கடைகளில் கடைகளின் வெளியே டெங்கு உற்பத்தியாகும் வகையில் திறந்த வெளியில் போடப்பட்டிருந்த 30 டயர்களை நகராட்சி பணியாளர்கள் நேற்று மாலை பறிமுதல் செய்யப்பட்டு வியாபாரிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA